**O.S. No. 104 /2015**
**Date:19.02 .2026**
**பி. வா.சா. 1 . காசிநாடார்**
**வாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

வா.சா.4 மாரியப்பன் என்பவருக்கு நான் தாய் மாமன் முறை என்றால் சரியல்ல. மாரியப்பன் என்பவருக்கும் எனக்கும் முன்விரோதம் இல்லை. வா.சா.5 ஆவுடைகோமதி என்பவரை எனக்கு தெரியாது. அவரை எனது தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய எனது வழக்கறிஞருக்கு நான் தகவல் சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை. ஆவுடைகோமதி என்பவரை குறுக்கு விசாரணை செய்ய யார் தகவல் கொடுத்தார் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். ஆவுடை கோமதி வீடு 4ம் தபசில் 5 அயிட்ட சொத்திற்கு மேல்பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். ஆவுடை கோமதி என்பவர் எனது உறவினர் கிடையாது. வாதி முத்தம்மாள் குடியிருந்து வரும் வீட்டிற்கு அருகில் சங்கரலிங்கம் என்பவர் மகன் சாமிகாளை குடியிருந்து வருகிறார் என்றால் தெரியாது. சாமிகாளையை குறுக்கு விசாரணை செய்ய நான் தகவல் சொல்லவில்லை என்றாலும், யார் சொல்லி குறுக்கு விசாரணை செய்தார்கள் என்ற விவரமும் தெரியாது என்றால் சரிதான். திருமலாபுரத்தின் மெயின் ரோட்டை தெற்கு தெரு என்று சொல்வார்கள் என்றால் சரிதான். மேற்படி தெருவில் ராமசாமி நாடார், குருவம்மாள் என்பவர்களின் மகன் மாரிச்செல்வம் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. வாதி முத்தம்மாள் என்பவரின் உடன் பிறந்த சகோதரி செல்வியை மாரிச் செல்வத்திற்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார்களா என்றால் அது பற்றி தெரியாது. குருசாமி நாடர், அந் தோணியம்மாள் என்பவர்களை தெரியாது. நான் திருமலாபுரம் கிராமத்தில் தான் பிறந்தது முதல் வசித்து வருகிறேன் என்றாலும் அங்குள்ள பாதி பேரை எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். வாதியின் மகன் இசக்கிராஜ் என்பவரை வா.சா.10 ஆக விசாரித்துள்ளதை தெரியுமா என்றால் தெரியாது. இசக்கிராஜ் என்பவரை குறுக்கு விசாரணை செய்ய நான் தகவல் சொல்லவில்லை யார் தகவல் சொன்னார்கள் என்ற விவரமும் தெரியாது.

திருமலாபுரம் கிராமத்தில் முத்துமாலையம்மன் பூ கடை மற்றும் பலசரக்கு கடை உள்ளதா என்றால் அது பற்றி தெரியாது. முத்துமாலையம்மன் பூ கடை மற்றும் பலசரக்கு கடையை குட்டி நாடார் என்பவர் நடத்தி வருகிறார் என்றாலும், அதை ஒத்துக்கொண்டால் எனது வழக்கிற்கு பாதகமாக அமைந்துவிடும் என்பதால் மறுக்கிறேன் என்றால் சரியல்ல. குட்டி நாடார் அ.இ.அ.தி.மு.க. கட்சியில் ஒன்றிய பிரதிநிதியாக இருந்து வருகிறார் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி குட்டி நாடார் என்பவரின் பெற்றோர் தான் குருசாமி, அந்தோணியம்மாள் என்றால் அது பற்றி தெரியாது. குட்டி நாடார் உடன் பிறந்த சகோதரர் அந்தோணி சாமி என்ற சிவனையா மற்றும் ராஜ் நாடார் ஆவார்கள் என்றால் அது பற்றி தெரியாது. எனது அம்மா இறந்து 15 வருடங்கள் இருக்கும், அப்பா எனது திருமணத்திற்கு முன்பாகவே இறந்து விட்டார். வாதியை நானும், எனது தாயார் மற்றும் சகோதரர் சேர்ந்து தான் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார் என்பவருக்கு திருமணம் செய்து வைத்தோம் என்றால் சரியல்ல. கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார் என்பவரை S.கோபால் என்று சொல்வார்கள் என்றால் அது பற்றி தெரியாது. சுப்பையா நாடார் மகன் கோபால் என்பவர் எனது அண்ணன் தான். சு.கோபால் என்று வேறு நபர் ஊரில் கிடையாது என்று சொன்னால் சரிதான், கோபால் நாடார் பெயரில் வேறு நபர்கள் உள்ளனர். சு.கோபால் மனைவி முத்தம்மாள் என்பவர்களை தவிர வேறு நபர்கள் ஊரில் உள்ளார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. கோவில் திருப்பணிக்கு நன்கொடை கொடுத்தவர்கள் பெயர் கல்வெட்டில் கணவன், மனைவி பெயரை குறிப்பிட்டு எழுதப்படும் என்றால் சரிதான். 2017ம் ஆண்டில் எங்கள் ஊரில் உள்ள கல்வி விநாயகர், பூ மாரியம்மன், மாலையம்மன் , கருப்பசாமி கோவில்களுக்கு மகாகும்பாபிஷேகம் நடத்தினார்கள் என்றால் சரிதான். மகாகும்பாபிஷேகத்திற்கு நன்கொடை கொடுத்ததற்காக கல்வெட்டு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மகாகும்பாபிஷேகத்திற்கு நான் நன்கொடை எதுவும் கொடுக்கவில்லை எனது மகன் சுப்புராஜ் அவனது பெயரில் கொடுத்தார். சுப்புராஜ் மனைவி பெயர் அனிதா. சுப்புராஜ் நன்கொடை

கொடுத்ததாக கல்வெட்டில் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி கல்வெட்டில் கோபால் முத்தம்மாள் பெயரில் வாதி நன்கொடை கொடுத்த விவரம் துலங்கும் என்றாலும், அதை ஒப்புக்கொள்ளக்கூடாது என்பதற்காகத்தான் என்னிடம் காட்டப்படும் கல்வெட்டிற்கான புகைப்படத்தை எனக்கு படிக்க தெரியாது என்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல. சேர்ந்தமரத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயல்படுகிறது என்றால் சரிதான். மேற்படி வங்கியில் கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவர் கணக்கு வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வங்கி கணக்கிற்கு போட்டோ ஒட்டப்பட்டு பாஸ்புத்தகம் வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் 2 புகைப்படங்களிலும் உள்ள பெண் வாதி முத்தம்மாள் தான் என்றால் சரிதான் ஆனால் கூட இருப்பவர் யார் என்று தெரியாது. (பிரதிவாதிகள் தரப்பு புகைப்படங்கள் உரிய முறையில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்படுகிறது, ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது ) வாதியை காட்டும் புகைப்படங்கள் (எண்ணிக்கை – 2 ) **வா.சா.ஆ.29** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி புகைப்படத்தில் உள்ளவர்கள் வாதியின் மகன்கள் என்றால் சரிதான். மேற்படி புகைப்படத்தில் உள்ளவர் எனது சகோதரர் கோபால் என்றால் சரியல்ல. மேற்படி புகைப்படத்தில் உள்ள நபர் எனது சகோதரர் என்று ஒப்புக்கொண்டால் எனது வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்பதால் மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது உடன் பிறந்த சகோதரரிகள் இரண்டு பேர் உள்ளார்கள், அதில் மூத்த சகோதரி திருமலையாச்சி, இளையவர் பெயர் சின்னப்பிள்ளை அவர் இறந்து விட்டார். குட்டியம்மாள் என்ற சகோதரி எனக்கு கிடையாது. குட்டியம்மாள் என்ற சகோதரி எனக்கு இருப்பதாக எனது எதிர் வழக்குரையில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எனது சகோதரிகளுக்கு பிராது 4ம் தபசில் சொத்தில் அவர்களுக்கு பங்கு கிடையாது என்றால் அவர்கள் வேண்டாம் என்று

சொல்லிவிட்டார்கள். எனது சகோதரிகளுக்கு திருமணத்தின்போது சீர் சீராட்டுகள் செய்ததன் காரணமாக சொத்தில் தங்களுக்கு பங்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள் என்றால் சரிதான். எனது சகோதரிகளுக்கு பங்கு இல்லை என்பதால் தான் பி.வா.சா.ஆ. 1 பாகப்பிரிவினை ஆவணத்தில் எனது சகோதரிகளை தரப்பினர்களாக காட்டவில்லை என்றால் சரிதான். வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களைப் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.4 ல் உள்ள புகைப்படம் வாதி முத்தம்மாள் என்பவருடையது தான் என்றால் சரிதான். வாதிக்கு வழங்கப்பட்ட குடும்ப அட்டை, மற்றும் வாக்காளர் அட்டை, ஆதார் அட்டை , வேலைவாய்ப்பு உறுதி அட்டை , பீடி கடையில் வழங்கப்பட்ட பணப்புத்தகம் ஆகியவற்றில் வாதியின் கணவர் பெயர் கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் நாடார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவைகள் மோசடியான ஆவணங்கள். மேற்படி ஆவணங்கள் வாதியால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்பதை காட்டுவதற்காக சட்டப் பூர்வமான நடவடிக்கை எதுவும் எடுத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணங்கள் அரசு அதிகாரியால் உரிய விசாரணை செய்து வழங்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. வாதி அவருக்கு வழங்கப்பட்ட குடும்ப அட்டை யை வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதில் கணவர் பெயர் கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி குடும்ப அட்டையில் எனது அண்ணன் இறந்த பிறது அவரது பெயர் நீக்கப்பட்டதற்கான குறிப்பு உள்ளது என்றால் சரியல்ல. வாதி குடியிருந்து வரும் வீட்டில் தான் கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் இறந்தார் என்றால் சரியல்ல. கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் இறந்ததாக சொல்லப்படும் பழைய வீடு எங்கு உள்ளது என்றால் கீழ தெருவில் உள்ள பூ மாரியம்மன் கோவில் தென்வடல் தெருவில் கீழ பக்கமாக உள்ளது. நான் சொல்லக்கூடிய கீழத் தெரு என்பதும், மேல தெரு என்பதும் வேறு வேறு என்றால் சரிதான். கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் உள்ளதா என்றால் உள்ளது. நான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி இறப்பு

சான்றிதழில் அவர் எங்கு இறந்தார் என்ற விவரம் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ.19 ஆவணம் கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவரின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்த விவரம் தெரியாது. கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் இறந்த தேதி 22.05.2014 என்றால் எனக்கு தேதி தெரியாது. கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் இறப்பு சான்றிதழில் பிராது 4ம் தபசில் 5ம் அயிட்ட சொத்தில் வைத்து தான் இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.2 மற்றும், பிவாசா.ஆ.3 ஆகிய ஆவணங்கள் வழக்கிற்கு பிந்தைய ஆவணம் என்பதால் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் நாடாரின் முதல் மனைவி பஞ்சவர்ணம் பிராது4ம் தபசில் 5ம் அயிட்ட சொத்திற்கு அருகாமையில் வசித்து வந்த G.ராஜ் என்பவருடன் தகாத உறவு கொண்டு அவர் கணவரை விட்டு பிரிந்து 1985க்கு முன்பே ஜாதி வழக்கப்படி விவாகரத்து செய்துவிட்டு ராஜ் என்பவரை திருமணம் செய்து கொண்டு கொடைக்கானலில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. ராஜ் நாடார் என்பவருடன் பஞ்சவர்ணம் என்பவர் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருவதால் தான் பி.வா.சா.ஆ.1 பாகப் பிரிவினை ஆவணத்தில் பஞ்சவர்ணத்தை தரப்பினராக காட்டவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பஞ்சவர்ணம் குடியிருந்து வருகிறார் என்பதால் வழக்கு பற்றி விவரம் பஞ்சவர்ணத்திற்கு தெரியும் என்று சொன்னால் பஞ்சவர்ணத்திற்கு தெரியாது. அவரது மகள் 1ம் பிரதிவாதிக்கு தெரியும். தாவா சொத்தில் பங்கு உரிமை உள்ளது என்று பஞ்சவர்ணம் கட்சி செய்யவில்லை என்றால் சரிதான் 1ம் பிரதிவாதி பிராது 4ம் தபசில் 5ம் அயிட்ட சொத்தைப் பொறுத்து உரிமை உள்ளது என எதிர் கோரிக்கை பரிகாரம் கோரியுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. எதிர்கோரிக்கைக்கு பஞ்சவர்ணத்தை நான் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை வழக்கிற்கு பஞ்சவர்ணம் அவசிய கட்சி என்று கட்சி செய்துள்ள நிலையில்

நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கையில் பஞ்சவர்ணத்தை சேர்க்காததால் எதிர்கோரிக்கை நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி வாரிசு சான்றிதழ் கோரி சங்கரன்கோவில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 47/2018 தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. வாதிக்கும், கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவருக்கும் 1998ல் திருமணம் நடைபெற்றது என்றாலும், அந்த திருமணமும் ஊரார், சமூகத்தார் , உற்றார் உறவினர் அறிய நடைபெற்ற திருமணம் என்றாலும் சரியல்ல. மேற்படி திருமண உறவு தற்போதும் நடைமுறையில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி திருமண உறவின்படி வாதி கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவரின் மனைவி என்ற முறையில் வாரிசு ஆவார் என்றால் சரியல்ல. மேற்படி வாரிசு என்ற அடிப்படையில் தான் வாதி பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதால் வாதிக்கு சொத்துக்களில் பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வாதியின் கணவர் கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் இறந்த பின்னர் வாதியை எனது ஆசைக்கு இணங்க சொன்னதற்கு வாதி மறுத்துவிட்டதால் விரோதம் கொண்டு இந்த வழக்கை மறுத்து கட்சி செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் வழக்கு உண்மை என்பதால் தான் மற்ற பிரதிவாதிகள் வாதியை எதிர்த்து சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்க வேண்டும் என்றாலும், எனது எதிர் கோரிக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.